2002 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991-96-ல் ஆட்சியில் இருந்தபோது—1994-ல் அவர் இருந்தபோது— என்னுடைய சொந்தக் கிராமமான ஆதிதிராவிடர் கிராமத்திற்குத் தனியாக இருக்கிற கிளியூர் மாரியம்மன் கோயிலுக்கு புரட்சித் தலைவி அறிவித்த திட்டத்தில் 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வாங்கி, பல ஆண்டுகளாகக் கட்டாமல் போடப்பட்டு, புரட்சித் தலைவி ஆட்சி திரும்ப வந்து, அதைக் கட்டுகிற சூழ்நிலையில், அந்த 1 இலட்சத்து 20 ஆயிரத்தையும் செலவு செய்து முடித்துவிட்டார்கள். நானும் கொஞ்சம் பங்கு போட்டு, அந்தக் கோபுரத்தைக் கட்டுகிற சூழ்நிலையில் இன்னும் ஒரு 25 ஆயிரம் ரூபாய் இருந்தால் போதும், அதைக் கட்டி முடித்து விடலாம். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் கோயிலினுடைய நிதி 7 கோடி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலேயிருந்து கருணையோடு ஒரு சிறிய தொகையைக் கொடுத்தால், அந்தப் பணி—ஆதிதிராவிடர் காலனிக்கு—புரட்சித் தலைவி கொடுத்த நிதி மூலம் நிறைவு பெறும் என்பதை இந்த நேரத்தில் உங்கள் வாயிலாகச் சொல்லி அதை ஒதுக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொல்லிய கோரிக்கை சிந்திக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 130, திரு. எஸ்.எஸ். மணி நாடார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

130—

மருத்துவமனை

***739—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆழ்வார் திருநகரியிலுள்ள சுகாதார நிலையத்தை மீண்டும் மருத்துவமனையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, ஆழ்வார் திருநகரியிலுள்ள கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணிநாடார் (குறுக்கீடு)

வினா எண் 131, திரு. சி. இராசேந்திரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

131—

ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்தல்

***2821—திரு. சி. இராசேந்திரன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து ஈச்சங்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு ஓர் ஒன்றியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர், அந்தத் தொகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவர் போன்றவர்களைக் கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்